Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி -06 | 22-07-2003 | செவ்வாய்க்கிழமை | ஓசை 154

கட்டட அலங்காரப் பொருட்கள்
கிறில் கற்கள், பூச்சாடிகள், சிறு தூண்கள், நிலத்திற்குப் பதிக்கும் கற்கள்.
விற்பனை நிலையம்
ஒளிர் தையலகம்
கிளிநொச்சி, விசுவமடு, வட்டக்கச்சி, மாங்குளம், மல்லாவி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, பளை.
விற்பனை ஆரம்பம் - 20.07.2003 முதல்
(2292)

## அரசின் புதிய வரைவு குறித்து

# புலிகளின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள

# ஜோன் வெஸ்பேர்க் இன்று வன்னி விஜயம்

## தமிழ்ச்செல்வனைச் சந்திப்பார்

(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்ட வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக வரைவு குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளும் நோக்கோடு நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தலைமையிலான குழுவினர் இன்று வன்னிக்கு வருகை தருகின்றனர். இக்குழு இன்று காலை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்து இது குறித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.**

கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்த ஜோன் வெஸ்பேர்க் தலைமையிலான குழுவினர் சிறிலங்கா அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வடக்கு-கிழக்கிற்கான நிர்வாகக் கட்டமைப்பு வரைவை விடுதலைப் புலிகளிடம் பரிசீலனைக்காக கையளித்திருந்தனர். இதேவேளை, இவ்வரைவை ஆழமாகப் பரிசீலிப்பதென புலிகள் முடிவு செய்துள்ளதாகவும் இதனையடுத்து விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக்குழு இதைப் பரிசீலித்து வருவதாகவும் கிடைக்கப் பெறும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையிலேயே வரைவு குறித்து புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளும் நோக்கோடு நோர்

(08ம் பக்கம் பார்க்க)

## யாழ். பண்ணைப்பாலத்தில் ராணுவம் திடீர் சோதனை

யாழ். பண்ணைப்பாலத்தின் தொடக்கப்பகுதியில் படையினர் நேற்றுத் திடீர் சோதனையில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஏறத்தாழ மூன்று மணி நேரத்துக்கு மேலாக யாழ் கோட்டையின் தென் மேற்குப் பகுதியிலுள்ள சோதனைச் சாவடியில் இப்பாதையூடாக வரும் சகல வாகனங்களையும் மறித்து படையினரும் பொலிசாரும் இணைந்து கடுமையான சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். இதன் போது சகல வாகனங்களும் சோதனை செய்யப்பட்டதுடன் .மிதிவண்டியில் எடுத்துவரப்படும் பொதிகளும் பிரி

(08ம் பக்கம் பார்க்க)

## காக்கைதீவில் மீனவர் மீது படையினர் கடும் தாக்கு

கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவரைப் படையினர் கடுமையாகத் தாக்கிச் சித்திரவதைக்குள்ளாக்கியுள்ளார்கள்.காக்கைதீவுப் பகுதியில் நேற்றுக் காலை எட்டு மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது. காலை வேளையில் கடலில் தொழில் செய்யச் சென்று கொண்டிருந்த ஒரு

(08ம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் தீர்ந்த நிலையில்

## திருக்கோயில் ஊறணிப்பகுதியில் உக்ரெயின் கப்பல் கரையொதுங்கியது

உக்ரெயின் நாட்டிற்குச் சொந்தமான கப்பலொன்று திருக்கோயில்-தம்பட்டை-சின்ன ஊறணிப்பகுதியில் கரையொதுங்கியுள்ளது. இக்கப்பலை கண்காணிப்புக்குழுவின் உதவியுடன் சென்று பார்த்துக் கடற்படையினர் அது உக்ரெயின் நாட்டுக்கப்பல் என உறுதிசெய்தனர். எரிபொருள் தீர்ந்ததால் கரையொதுங்கியுள்ள இக்கப்பலை கடற்படையினர் திருகோணமலைக் கடற்படைத்தளத்திற்குக் கொண்டுசென்றுள்ளனர்.

## வீதி விபத்தில் ஒருவர் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 வீதியில் கிளிநொச்சி நகரப் பகுதியில் நேற்று இரண்டு உந்துருளிகள் விபத்துக் குள்ளாகியதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த சீலன் என்ற இளைஞன் கிளி. பொன்னம்பலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவ்விபத்துத் தொடர்பாக காவல்துறையின் வாகனப்போக்குவரத்துப் பிரிவினர் உந்துருளியைச் செலுத்தி வந்தவரை நீதிமன்றில் முற்படுத்தினர். (லோ)

## யாழ். மாணவர் மத்தியில் போதைப் பொருள் பாவனை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மாணவர்கள் மத்தியிலே போதைப் பொருள் பழக்கம் அதிகரித்து வருவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களில் பலர் இரவு நேரங்களில் போதை தலைக்கேறிய நிலையில் வீதிகளில் அலைந்து திரிந்து குழு மோதல்களிலும், பாலியல் துர்நடத்தைகளிலும் ஈடுபட்டு வருவதாகவும், இவ்வாறான பல மாணவர்கள் கைது செய்யப்பட்டு எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவிக்கின்றார்கள். இவ்வாறான மாணவர்களின் நலனில் பெற்றோர் அக்கறை கொள்ளுமாறும் பொலிசார் கேட்டுள்ளார்கள். (33)

## மன்னார் பகுதியில்

## பாலியல் வன்முறை முயற்சியில் ஈடுபட்ட நபருக்கு சிறை ஒறுப்பு

(அலுவலக செய்தியாளர்)

மன்னார் பகுதியில் பாலியல் வன்முறை முயற்சியில் ஈடுபட முயன்ற நபருக்கு மன்னார் மாவட்ட நீதிமன்றம் ஏழு மாதகால சிறையொறுப்பும் குற்றப் பணமாக 6000 ரூபாவும் செலுத்துமாறு தீர்ப்பளித்துள்ளது.

மன்னார் பகுதியில் குறித்த நபர் பாலியல் வன்முறை முயற்சியில் ஈடுபட முயன்றவேளை மன்னார் காவல் பணிமனையினரால் கைது செய்யப்பட்டு மன்னார் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை அடுத்தே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

## இடைக்கால நிர்வாகத்தில் பிரதிநிதியை நியமிக்க பொ. ஐ. மு. வினர் மறுப்பு

வடக்குக்கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் பொதுசன ஐக்கிய முன்னணியின் பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கான அரசாங்கத்தின் ஆலோசனைகள் அங்கீகரிக்க முடியாது என்று அந்தக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

சனாதிபதியின் அனுமதியின்றியே விடுதலைப்புலிகளுக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்குவதற்கான ஆலோசனையை அரசாங்கம் முன்வைத்திருந்தது.

இவ்வாறான நிலையில் பொதுசன ஐக்கிய முன்னணியின் பிரதிநிதி ஒருவரை நியமிக்க அரசாங்கத்துக்கு எந்தவித உரிமையும்

(08ம் பக்கம் பார்க்க)

## யாழ். இல் ஜீ.ரீ.சற்அமைப்பால் 55பாடசாலைகள் கையளிப்பு

யாழ். குடாநாட்டில் ஐரோப்பிய யூனியன் அமைப்பின் நிதியுதவியின் கீழ் ஜீ.ரீ.சற் அமைப்பினால் புனரமைப்புச் செய்யப்பட்ட 55பாடசாலைகளை வைபவரீதியாகக் கல்வித்திணைக்களத்திடம் கையளிக்கும் நிகழ்வு இன்று இடம் பெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இப்பாடசாலைகள் கல்வித் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அகதிகள் புனர்வாழ்வுமீள் குடியமர்வு அமைச்சர்

(08ம் பக்கம் பார்க்க)

## சமாதானத்திற்கெதிரான சக்திகளுக்கெதிராக மட்டு., அம்பாறையில் பூரண ஹர்த்தால்

சமாதானத்தைக் குழப்ப விரும்பும் சக்திகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்கக் கோரி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

சமாதானச் சூழல் ஆரம்பிக்கப்பட்டு 16 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பதட்டமான சூழ்நிலை தோன்றியுள்ளது. பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்படுவதுடன் பொதுமக்கள் மீதான பாதுகாப்புக் கெடுபிடிகளும் சோதனை நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளதனால் சமாதானத்தைக் குழப்பவிரும்பும் சக்திகளுக்கெதிராக உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி மட்டக்களப்பு மக்கள் பெருமளவும் நேற்றும் இன்றும் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு விடுத்த வேண்டுகோளையடுத்து

(08ம் பக்கம் பார்க்க)



## குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினருக்கு தொடர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் நிலை கொண்டுள்ள சிறிலங்காப் படையினர் தொடர் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.மணற்காடு, குடத்தனை, சவுக்கந்தோப்புப் பகுதிகளில் பெருமளவு படையினர் தினமும் பயிற்சி நடவடிக்கையிலீடுபட்டு வருகின்றனர். இப்பயிற்சியினை யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் நேரடியாகச் சென்று பார்வையிட்டுள்ளார்.இதேவேளை, மணற்காட்டுப் பகுதியில் படையினர் புதிய காவலரண்களை அமைத்து வருகின்றனர். சவுக்கந்தோப்புப் பகுதியைப் பராமரித்துவந்த குடிப்பாதுகாப்புச்

(08ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்குண்டு
நல்ல நிலையில் உள்ள **Pantiyam 1 Computer, Pantiyam 4 Computer,** பிரிண்டருடன் **OSAKI VCD PLAYER HONDA 1000kg** சூக்கேஸ் இஞ்சின் விற்பனைக்குண்டு. தங்கமாளிகை, ஈழநாதம் பணிமனை அருகாமை, யாழ்சாலை, கிளிநொச்சி. (3566)

### தவறிவிட்டது
வரப்பிரகாசம் கிங்ஸ்ரன் பிரகாஸ் என்பவருடைய தே.அ.அட்டையும் (811574546) பயணிகள் அனுமதிப் பத்திரமும் 18ம் திகதிபுளியங்குளம்-புதுக்குடியிருப்பு பேருந்தில் தவற விடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தருமபுரம்புனிதசவேரியார் ஆலய பங்குத் தந்தையிடம் ஒப்படைக்கவும்.(3564)

### தவறிவிட்டது
குணநாயகம் மயூரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை பளையில் இருந்து கிளிநொச்சிக்கு மோட்டார் சைக்கிளில் செல்லும் போது தவறிவிட்டது. இதைக்கண்டெடுத்தவர் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (3568)

### தவறிவிட்டது
இளையதம்பி மகேஸ்வரன் என்பவருடைய தே.அ.அட்டையும் பயணிகள் அனுமதிப்பத்திரமும் 19ம் திகதி பருத்தித்துறை- புதுக்குடியிருப்பு பேருந்தில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தருமபுரம் புனித சவேரியார் ஆலயப் பங்குத்தந்தையிடம் ஒப்படைக்கவும். (3565)


# யுத்தத்திற்குச் செல்வோமானால் நாம் மீண்டும் கடனாளிகளாவோம்

## பொலநறுவையில் ரணில் விக்கிரமசிங்க

இடைக்கால நிர்வாகம் தொடர்பாக விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பாக அவர்கள் ஆராய்ந்து சில வாரத்துக்குள் அரசாங்கத்துக்கு பதிலளிப்பார்கள் என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியை புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் பொலநறுவையில் கடந்த இருநாட்களாக இடம் பெறுகின்றன. இதில் அவர் உரையாற்றும் போது, மேலும் இந்த வேளையில் ஒப்பந்தத்தை ரத்துச் செய்து வடுமாறு சிலர் கூறுகின்றனர். இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையில் குறைபாடுகள் இருந்தால் அதனை நிவர்த்தி செய்வதற்கு மாற்று யோசனைகளை முன்வைக்குமாறு ரணில் விக்கிரம சிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யுத்தத்திற்குச் சென்றால் நாம் மீண்டும் கடனாளியாக வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் கூறினார்.யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் சிக்கல்கள் ஏற்பட்ட போதிலும் கடந்த 18 மாதகாலமாக யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருந்து வருகின்றது இதனால் பெரும் எண்ணிக்கையிலான உயிர்ச் சேதத்தையும் தவிர்த்துள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# கமக்கார அமைப்பு உறுப்பினர்களுக்கு இருநாட்கள் பயிற்சிக் கருத்தரங்கு

(புதுக்குடியிருப்பு)

ஒட்டுசுட்டான்பிரதேசத்தில்கமக்கார அமைப்பு உறுப்பினர்களுக்கு இருநாட்கள் கருத்தரங்கு ஊடான பயிற்சி வகுப்புக்கள் இடம்பெற்றுள்ளன. த.பொ. மேம்பாட்டு நிறுவனத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளரின் அனுசரணையுடனும் போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் துறைசார் உத்தியோகத்தர்களால் கடந்த 16,17 ஆம் திகதிகளில் இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளதாகப் பொருண்மிய செய்திக்குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 50க்கு மேற்பட்ட கமக்கார உறுப்பினர்கள்கலந்து கொண்டனர். (26)

## வீதி விபத்தில் மூவர் பலி

நாவலப்பிட்டி கிறின்ஸ்வீதி பகுதியில் நேற்றுக்காலை இடம் பெற்ற விபத்து ஒன்றில் மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.தலைவாக்கலயிலிருந்து நாவலப்பிட்டிக்குச் சென்றுகொண்டிருந்த பேருந்து ஒன்றே விபத்திற்குள்ளாகியுள்ளது.

# வவுனியா மாவட்ட சாரணர்களுக்கு விருது வழங்கல்

வவுனியா மாவட்ட சாரணர் சங்கத்தின் முன்னோடிச் சஞ்சிகை வெளியீடும், சனாதிபதி சாரணர் விருது வழங்கும் நிகழ்வும் இன்று காலை 11.00 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. வவுனியா தெற்கு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொன்னையா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வவுனியா அரச அதிபர் கே.கணேஸ், சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கம், வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வி.ஆர். ஏ. ஒஸ்வெட் ஆகியோர் கலந்து கொள்வர்.

இவ்வாண்டு சனாதிபதி சாரணர் விருதினைப் பெற்ற சாரணர்களுக்கு பிரதமவிருந்தினராகக்கலந்து கொள்ளும் வவுனியா அரச அதிபர் விருது வழங்கிக் கௌரவிப்பார். (10)


## வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி

# கேள்வி அறிவித்தல் – 2003

கீழ்க் குறிப்பிடப்படும் கட்டட வேலையை மேற்கொள்வதற்கான கேள்வி "இக்ராட்" நிறுவனத்தில் தரம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கல்விப்பணிப்பாளரினால் கோரப்படுகிறது.

**கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி - 31.07.2003 பி.ப 3.00 மணி**
**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 08.08.2003 பி.ப 1.00 மணி**
**கேள்விகள் திறக்கப்படும் திகதி - 08.08.2003 பி.ப 1.00 மணி**

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் வைக்கப்பட்டு வலயக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி என்ற முகவரியிடப்பட்டுக் கேள்விகள் ஏற்கப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது இவ்வலுவலகத்தில் நேரடியாக வந்து திகதி முத்திரை இட்டு கையளிக்கலாம். கேள்விப் பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் விபரம் குறிப்பிடல் வேண்டும்.

**கேள்வி நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.**

| கேள்வியின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|
| 1.கிளி/கிளிநொச்சி இந்து ஆரம்ப பாடசாலை இரண்டு மாடிக்கட்டடம் 110'25' அமைத்தல் முதலாம் தொகுதி | 25,000/- | 1000/= |
| 1.கிளி/வட்டக்கச்சி ம.வி. இரண்டு மாடிக்கட்டடம் 110'25' அமைத்தல் முதலாம் தொகுதி | 25,000/- | 1000/= |

ப. அரியரத்தினம்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி-8434)



# மாபெரும் விளையாட்டுப்போட்டி

## முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச்சபை நடாத்தும் மாபெரும்விளையாட்டுப் போட்டி -2003

*தமிழீழ விளையாட்டு ஒருங்கிணைப்புக்குழுவின் அனுசரணையுடனும் தமிழீழ நிர்வாக சேவையின் ஆதரவுடனும் முல்லைத் தீவு மாவட்ட கூட்டுறவுச் சபையும் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களும் இணைந்து 81ஆவது சர்வதேச கூட்டுறவுத்தின விழாவை முன்னிட்டு வன்னி மாவட்டத்தில் உள்ள போட்டியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றது.*

போட்டிகள்:-

சைக்கிள் ஓட்டம் (40 மைல் 18.44பல் வீல்)
பதிவுக் கட்டணம் -250 ரூபா
போட்டி முடிவுத் திகதி 24-07-2003 வியாழக்கிழமை
போட்டி ஆரம்பிக்கும் நேரம் -காலை 6.00மணி.
வழிப்பாதை - விசுவமடு - புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் முள்ளியவளை- முல்லைத்தீவு- புதுக்குடியிருப்பு.

போட்டிகள் யாவும் சரியாக காலை 6.00 மணிக்கு விசுவமடுச் சந்தியில் ஆரம்பமாகும். விண்ணப்பங்கள் யாவும் செயலாளர், மாவட்டக் கூட்டுறவுச்சபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.

*தகவல்:*
*மாவட்டச் செயலாளர்*
*மாவட்ட கூட்டுறவுச் சபை,*
*புதுக்குடியிருப்பு.*

(சி.7766)


# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 05 ◎ 09 ◎ 1969



மண்ணுக்காக 22 ◎ 07 ◎ 1990

## கப்டன் பிரபா

தங்கலிங்கம் [திருநீ கௌண்டன்]
தாரணி
மயிலிட்டி

இந்நாளில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

த. முகவரி
இல: 888,
ஆறுமுகம் ரோட்,
வட்டக்கச்சி.

(3563)

குடும்பத்தினர்.

# சிறைகளிலுள்ள அனைவரையும் விடுவிக்க பலஸ்தீனப் பிரதமர் அபாஸ் வேண்டுகை!

**இஸ்ரேலினால் கைது செய்யப்பட்டுச் சிறைகளில் வாடும் அனைத்துப் பலஸ்தீனர்களையும் விடுவிக்க வேண்டும் என்று பலஸ்தீனப் பிரதமர் இஸ்ரேலிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அனைவரையும் விடுவிக்க மறுத்திருக்கும் இஸ்ரேல் சிறைகளில் இருக்கும் நூற்றுக் கணக்கான பலஸ்தீனக் கைதிகளை விடுவிக்க நேற்று முன்தினம் ஒப்புக்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் இஸ்ரேலியப் பிரதமரைச் சந்தித்த அபாசுக்கு இவ் விடுதலை குறித்த உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது.

இது சமாதான முயற்சிகளுக்கான தமது செயற்பாடுகளில் ஒன்று என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய சிறைகளில் வாடும் பலஸ்தீனர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டுமெனப் பலஸ்தீனத் தீவிரவாத அமைப்புகள் இஸ்ரேலிய அரசுக்குத் தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருகிறது. இதற்கு இணங்காவிட்டால் யுத்தநிறுத்த உடன்பாட்டிலிருந்தும் விலகுவதாக அவை எச்சரிக்கை விடுத்துள்ளன.

இந்நிலையில் பலஸ்தீனப் பிரதமரும் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்துள்ளமையானது இஸ்ரேலிய அரசிற்குப் பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



லைபீரிய தலைநகர் மொன்ரோவியாவில் கடமையில் ஈடுபட்டுள்ள அரச படையினர்

# ஈராக்கினுள் பன்நாட்டுப் படைகள் ஐ.நா. அனுமதி பெற தீவிர பரிசீலனை!

(வொஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரம் இன்றி ஈராக்கிற்கு இராணுவத்தை அனுப்பமாட்டோம் என்று இந்தியா, ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகள் கூறியுள்ளதையடுத்து முறைப்படி ஐ.நா.சபையில அனுமதி பெற அமெரிக்கா பரிசீலித்து வருகின்றது.



இந்தியாவில் லாகூர் நகரில் ஏற்பட்ட வெள்ள நீரினைக் கழுதைகளின் துணையுடன் கடக்கும் மக்கள்.

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி இராணுவ நடவடிக்கை மூலம் கவிழ்க்கப்பட்டதையடுத்து அங்கு இன்னமும் ஆதிக்கம் செலுத்தி வரும் அமெரிக்கா, நிர்வாகப் பணிகளை மேற்கொள்ள இந்திய இராணுவத்தில் 17000 வீரர்களை அனுப்புமாறு கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால் ஐ.நா.வின் தலைமையில் மட்டுமே இந்திய இராணுவம் செல்லுமென இந்தியா உட்பட ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகள் மறுத்து விட்டன.

இதனையடுத்து ஈராக்கிற்கு ஏனைய நாடுகளின் இராணுவத்தை அனுப்ப ஐக்கிய நாடுகள் சபையின தீர்மானம் கொண்டு வருவது என அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

இது பற்றி பரிசீலித்து வருவதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ் பீல்ட் கூறியுள்ளார். எனவே இதற்கான தீர்மானம் விரைவில் ஐ.நா. சபையில் கொண்டு வரப்படும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

# சர்வாதிகாரியான இடியமீன் எவ்வேளையும் உயிரிழக்கலாம்!


உகண்டாவின் முன்னாள் சர்வாதிகாரியான இடியமீன் எந்த வேளையிலும் உயிரிழக்கலாம் என சவூதியரேபிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கோமா நிலையில் உள்ள இடியமீன் தற்போது சவூதி அரேபிய வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த சனிக்கிழமை கோமா நிலைக்கு ஆளான இடியமீன் 1979 ஆம் ஆண்டு முதல் சவூதியில் தஞ்சம் அடைந்து வாழ்ந்து வருகின்றார்.

கிழக்கு ஆபிரிக்க நாடான உகண்டாவில் 1971 ஆம் ஆண்டு முதல் 1979 வரை கொடுங்கோல் ஆட்சி புரிந்த சர்வாதிகாரியான இடியமீன் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொலை செய்யப்படுவதற்குக் காரணமாக விருந்தவர்.

முன்னாள் குத்துச் சண்டைச் சம்பியனான இவர் நான்கு மனைவிகளுடன் சவூதி அரேபியாவில் வாழ்ந்து வந்தார்.



இந்தியாவின் பெங்களூர் வைத்தியசாலைக்கு இருதய சத்திரசிகிச்சைக்காக அழைத்து வரப்பட்ட பாகிஸ்தானின் நூர் பாத்திமா என்ற சிறுமி இரு நாடுகளுக்கும் இடையிலான பேருந்துசேவை மூலம் இவர் பெற்றோரால் அழைத்து வரப்பட்டார்.

# குரோஷியாவில் காட்டுத் தீ 600 ஹெக்ரேயர் காடுகள் அழிவு!

குரோஷியா நாட்டில் பரவி வரும் பயங்கரக் காட்டுத் தீயால் சுமார் 600 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் வளர்ந்துள்ள பைன் மரங்கள் கருகிச் சாம்பலாகியுள்ளது.

ஐரோப்பாவிலுள்ள குரோஷியாவில் கடந்த சில தினங்களாகக காட்டுத் தீ பரவி வருகின்றது. தற்போது அங்கு கோடை வெப்ப காலம் நிலவுவதாலும், கடுமையான வெப்பக்காற்று வீசுவதாலும் தீயின் வேகம் அதிகரித்து அங்குள்ள வனப் பகுதி முழுவதையும் சாம்பலாக்கி வருகின்றது.

இந்தத் தீயைக் கட்டுப்படுத்துவதற்காக நீர் நிலைகளிலிருந்து சேமிக்கப்பட்ட நீர் விமானம் மூலம் எரியும் பகுதியில் கொட்டப்படுகின்றது.


இருப்பினும் தீயின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் தீயணைப்புப் படையினர் போராடி வருகின்றனர்.

# கலைஞரின் அபிப்பிராயம்

(சென்னை)

அயோத்தியில் இராமர் கோயில் கட்ட நாடாளுமன்றத்தில சட்டம் இயற்ற வேண்டிய அவசியம் இல்லையெனத் தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம வெளியிட்ட அறிக்கையில், இந்தப பிரச்சினையில் நீதிமன்றத் தீர்ப்பினை ஏற்றுக்கொள்வதாகப் பிரதமர வாஜ்பாய் அறிவித்துள்ள நிலையில், நீதிமன்றத் தீர்ப்பிற்குக் காத்திராமல் சட்டம் இயற்றுவதற்கு இப்போது என்ன அவசியம்? என்று அவர் வினா எழுப்பியுள்ளார்.



அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான தீபத்தை தெற்கு ரோம் நகரில் நடைபெற்ற விசேட வைபவத்தின் போது பாப்பரசர் 2-வது அருளப்பர் சின்னப்பர் ஏற்றிவைத்துப் பார்வையிடுகிறார்.

# சோனியா, அயோத்தியில் ராமர் கோவில்; பா.ஜ.க.வின் இரு பிரதான தேர்தல் வியூகம்

(புதுடில்லி)

சோனியாகாந்தி வெளிநாட்டுக்காரர் என்பதைத் தேர்தலின் போது பிரச்சாரம் செய்வோம். என பாரதீய ஜனதா திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

காங்கிரஸ் தலைவி திருமதி சோனியாகாந்தி வெளிநாட்டைச் சேர்ந்தவர் எனும் பிரச்சினையைத் தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்துவோம் என்று பாரதீய ஜனதாக் கட்சி கூறியுள்ளது.

அத்துடன் அயோத்தியில் ராமர் கோயில் கட்டும் கொள்கையைக் கைவிடவில்லை என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

பாரதீய ஜனதா கட்சியின் 03 நாட்கள் தேசிய செயற்குழுக் கூட்டம் ராஜ்பூரில் நேற்று முன்தினம் நிறைவு பெற்றுள்ளது.

இக் கூட்டத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலை எதிர்கொள்ளக் கட்சித் தொண்டர்களுக்கு 25 அம்சத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

300 தொகுதிகளில் வெற்றி பெறுவது எனும் இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் டில்லி,மத்திய பிரதேசம் உள்ளிட்ட 05 மாநிலச் சட்டப் பேரவைத் தேர்தலிலும் வெற்றியிலக்கை மையமாகக் கொண்டு பணியாற்றுவது என்றும் செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரதமர் வாஜ்பாய்க்கு வயதாகிவிட்டது எனும் காரணத்தினால் அவர் ஓய்வெடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் கருத்துக் கூறியிருப்பதைப் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் வெங்கையா நாயுடு வன்மையாகக் கண்டித்துள்ளார்.

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது பாரதீய ஜனதாவின் முக்கிய கொள்கைத் திட்டம் என்றும் அதனைக் கைவிடும் பேச்சுக்கே இடமில்லை என்றும் நாயுடு தெரிவித்துள்ளார்.

# மத்திய அரசின் போக்கிற்கு காங்கிரஸ் கடும் கண்டனம்!

(புதுடில்லி)

அயோத்தி வழக்கில் துணைப் பிரதமர் அத்வானி, மனிதவள மேம்பாட்டு அமைச்சர் முரளி மனோகர் யோசி ஆகியோர் உள்ளிட்டவர்கள் மீதான குற்றப்பத்திரிகையைப் பலவீனப் படுத்துவதற்கு மத்திய புலனாய்வுப் பிரிவை அரசு தவறாகப் பயன்படுத்துகின்றது. என்று எதிர்க்கட்சிகள் கண்டனமும், மக்களவையில் ஒத்திவைப்புத் தீர்மானமும் கொண்டுவருவதாகத் தீர்மானித்துள்ளன.

காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தியின் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# கேரளாவில் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு நெருக்கடி!

கேரளாவில் அந்தோனி தலைமையிலான காங்கிரஸ் அரசுக்கு அளித்து வரும் ஆதரவை விலக்கிக் கொள்வதாக இரண்டு கூட்டணிக் கட்சிகள் கூறியிருப்பதால், சட்டப் பேரவையில் நிதி மசோதா நிறைவேறுவது கேள்விக் குறியாகியுள்ளது.

கேரளாவில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி அரசு நடந்து வருகின்றது. இதில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கேரளா காங்கிரஸ் உள்ளிட்ட பல கட்சி இடம் பெற்றுள்ளன.

இந்த நிலையில், முஸ்லிம் சமூகத்தினை முதலமைச்சர் ஏ.கே. அந்தோனி விமர்சித்தமையினால், ஆத்திரமடைந்த முஸ்லிம் லீக், கேரளா காங்கிரஸ கட்சி ஆகியவை அவரது அரசுக்கு அளித்து வரும் ஆதரவை வாபஸ் பெற முடிவு செய்து அறிவித்துள்ளன.

இதனால் அரசுக்கு நெருக்கடியும், மாநில சட்டப் பேரவையில் நிதி மசோதாவும் நிறைவேறாமல் போகும் சூழல் உருவாகியுள்ளது.

இதனால் கூட்டணியரசை சமாளிக்கக் காங்கிரஸ் சமரச முயற்சிகளில் இறங்கியுள்ளது.

# சந்திரிகா என்ன செய்யமாட்டார்? என்றே அவரைத் தெரிந்தவர்கள் கேள்வி எழுப்புவர்

ஸ்ரீலங்காவின் அரசியலமைப்பின் பிரகாரம் ஒருவர் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேண்டுமாயின் அவர் தேர்தல் நடைபெறுவதற்கு ஆகக் குறைந்தது ஒரு வருடத்துக்கு முன்பாக தமது கட்சியின் வேட்பு மனுவைத் தாக்கல் செய்யவேண்டும். தற்போதைய சனாதிபதியினது பதவிக்காலம் முடிவதற்கு இன்னும் சுமார் இரண்டரை ஆண்டுகள் இருக்கின்றன. இதற்கு முன் கூட்டியே திட்டம் வகுக்கும் வகையிலும் தமது கட்சித்தலைமைப் பொறுப்பை பாதுகாக்கும் பொருட்டும் அண்மையில் கட்சியின் (ஸ்ரீ.ல.சு.க.) நிறைவேற்றுக்குழுக் கூட்டம் நடைபெற்றுள்ளது. இந்தக் கூட்டத்தின்போதும் கட்சித் தலைமைத்துவம் எதுவித எதிர்ப்புமின்றி ஏகமனதாக சந்திரிகாவின் கைகளில் ஒப்படைக்கப்பட்டது.



இந்த வேட்பு மனுத்தாக்கல் செய்ய கால அவகாசம் போதாது எனில் தமக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி மேலும் ஒரு வருடத்துக்கு சனாதிபதித் தேர்தலை ஒத்திப்போடவேண்டியேற்படலாம். அப்படியில்லை எனக் கட்சித் தலைமைத்துவத்தை பாதுகாத்துக்கொள்ள வேண்டி ஏற்படும். தற்போது சந்திரிகா நிட்டம் புவசங்கபோதி வித்தியாலயத்தில் கூடிசெய்து கொண்டுள்ளதும் அதுவே. இந்த நிட்டம் புவ வித்தியாலயம் ஒரு வகையில் பண்டாரநாயக்க பரம்பரைக்கு ஒரு பிரசித்தமான இடமாகும். காரணம் இதே இடம்தான் அன்று சந்திரிகாவின் தாயாரான ஸ்ரீமாவோவின் குடியுரிமை ஜே.ஆரின் அரசினால் பறிக்கப்பட்டபோது அவருக்கு துணைபுரிந்த இடம். அதாவது தமது கட்சித் தலைமைத் துவத்தையாவது பாதுகாத்துக் கொள்வதற்காக கூட்டம் நடைபெற்ற இடம் அதன் மூலம் அனைத்து அதிகாரமும் கூடிய தலைவர் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது நடந்தது 1983 ஆவணி மாதம். ஆயினும் அன்றைய மாநாட்டுக்கு சந்திரிகா சமுகமளிக்காது இருந்தது மட்டுமன்றி இம் மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்சியிலிருந்தும் விலகினார்.

சந்திரிகா மக்கள் குடியேற்றம் என்ற அமைப்பின் பணிப்பாளர் பதவி வகித்தபோது அதாவது 1972-73ஆம் ஆண்டளவிலேயே அரசியலில் பிரவேசித்தார் எனினும் 1983இலிருந்து 93வரை அவர் அரசியலை விட்டு விலகியே இருந்தார். 1993ஆம் ஆண்டு மேல்மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு வென்றதன் மூலம் மீண்டும் (ஸ்ரீ.ல.சு) கட்சியில் இணைந்து அரசியலில் பயணத்தைத் தொடங்கினார். 1993-2003 காலப்பகுதியில் முதலமைச்சராக இருந்து பிரதமராக வளர்ச்சியடைந்து சனாதிபதி என்ற நிலையில் இருக்கின்றார் அந்த நிலைக்கும் ஆபத்து ஏற்பட இன்னும் 897 நாட்களே இருக்கின்றன. அது சனாதிபதிக்கான தேர்தல் சந்திரிகா என்ன செய்வார்? அவரைப் பற்றி தெரிந்தவர்கள் அப்படி ஒரு போதும் வினவ மாட்டார்கள். சந்திரிகா என்ன செய்யமாட்டார்? என தெரிந்தவர்கள் கேள்விஎழுப்புவார்கள்.

சந்திரிகாவுக்கு **S.W.R.D.** பண்டார நாயக்க அப்படிப் பெயர் வைத்ததும் ஒரு காரணத்துக்காகவே அந்நாளில் சந்திரிகா பிறந்தபோது ஒரு குளத்திற்கும் "சந்திரிகா வாவி" என பண்டாரநாயக்க பெயர் வைத்தார். அது எப்போதும் வற்றிவிடாதகுளம். அதைப்போல சந்திரிகாவின் அரசியலும் வற்றாத ஒன்றாகவே இருக்கிறது. எனினும் 1983-93 காலப்பகுதியில் அரசியலில் வரட்சி காணப்பட்டது. பின்னர் 1993இல் ஏற்பட்ட அரசியல் வெள்ளத்தினால் மீண்டும் சந்திரிகாவின் அரசியல் குளம் வழிந்தது. ஆனால் தற்போதும் ஒரு வரட்சி ஏற்படும் காலம் அண்மிப்பதுபோன்று தெரிகின்றது. இதனைத் தடுக்க அவர் முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பதாக அண்மைய நிட்டம்புவ சங்கபோதி வித்தியாலயத்தில் நடந்த கூட்டம் புலப்படுத்துகின்றது. இது எங்கு கொண்டு விடப்போகிறதோ தெரியவில்லை. ஆனால் தற்போது ஆளும் கட்சியில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலை இதன் முடிவாகுமாப் போலும் உள்ளது.

அதாவது ஆளும் அமைச்சரான எஸ்.பி.திசாநாயக்காவின் செயல்இதற்கு அத்திவாரமாகுமா?

உண்மையில் சந்திரிகாவின் பொ.ஐ.முன்னணிக்கு ஆட்சியமைக்கும் அதிகாரம் இல்லாமல் போனது ரவூப் ஹக்கீமினாலேயே. அதன் பின்பு ஆனந்தசங்கரியின் தமிழர் கூட்டணி கட்சி. ஆனால் சந்திரிகாவுக்கு ஒரு அரசியல் கவிழ்ப்பு நடவடிக்கையாக திசாநாயக்காவின் செயல் உற்சாகத்தை அளித்துள்ளது. அதாவது அவர் இராஜினாமா செய்வது என முடிவெடுத்தமை.

சந்திரிகாவின் அரசை அன்று உலுப்பியது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தொண்டமானின் அச்சுறுத்தலும் கர்ச்சிப்பும். அதனோடு 2001 ஆண்டு ஆடி ஆவணி மாதங்கள் தொடர்ந்து பொ.ஐ.மு. அரசு ஆட்டம் கண்டது.

அவ்வாறு ரணிலின் அரசும் முஸ்லிம் காங்கிரசின் பிளவு காரணமாகச் சிறிது ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது. தற்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலர் சந்திரிகாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருப்பதாக வெளியான செய்தியால் ஆளும் கட்சி அமைதியாக இருக்கிறது. இப்போது வதந்தி இவ்வாறு பரவியுள்ளது. எதிர்க் கட்சியின் பட்டியலுக்கு "அவரும் போகிறார்." "இவரும் போகிறார்" அவரும் இருக்கிறார் என்ற பட்டியல் பற்றிய பேச்சுக்கள் அடிபடுகின்றன. இப்போது நொந்து போனவரின் சந்தர்ப்பமா? யாருடைய சந்தர்ப்பமாயினும் இந்த மூன்று மாதங்கள் சந்திரிகாவுக்கான சந்தர்ப்பம். அந்தக் காலப்பகுதியில் அவர் அரசமைக்கும் வழிகளை ஆராய்வார். அதன் ஒரு மார்க்கமே ஜே.வி.பி.யின் கூட்டணி. அரசைக் கலைப்பதற்கு அதன் ஒத்துழைப்பையே சந்திரிகா நம்பியுள்ளார். இன்னும் ஒரு வழியானது ஐ.தே.க.யின் தலைமைப் பொறுப்பை ரணிலிடமிருந்து பறிப்பதன் மூலம் அக்கட்சிக்குள் பிளவை ஏற்படுத்துதல் மூன்றாவதாக ரணிலுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்தல். இவற்றுள் அவர் பெரிதும் விரும்புவது இரண்டாவதாகக் குறிப்பிட்ட கட்சிக்குள் முரண்பாடுகளை ஏற்படுத் துதலை. இதன் மூலம் புதிய தலைவரைப் பிரதமராக நியமித்து ரணிலை அரசியலில் இருந்து நீக்கிக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்துவது அவரின் திட்டம். கட்சிக்குப் பிளவு ஏற்பட்டால் அது நீதிமன்றம் வரை செல்லும். இதனைப் பயன்படுத்திப் பாராளு மன்றைக் கலைத்து விடலாம். அத்தோடு அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வந்து அதை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளோடு நிறைவேற்றி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை இல்லாமல் செய்தல், சம்பிரதாய சனாதிபதி முறையை அறிமுகப்படுத்தி அதற்கு ஐ.தே.க. உறுப்பினர் ஒருவரை நியமித்தல், சந்திரிகா பிரதமராகப் போட்டியிட்டு வெற்றி பெறுவதன் மூலம் அதிகாரமிக்க (சனாதிபதியின் ஆதிக்கமில்லாத) பிரதமராகப் பதவி வகிக்க முடியும் என்பது அவர் எண்ணமாக இருக்கலாம். அதற்கான அவரின் திட்டத்துக்கான சூழலும் உருவாகிவிட்டது. அதன் ஒரு அங்கமாக ஐ.தே.முன்னணிக்குள் இரகசிய உடன்படிக்கை ஏற்படுத்துவது மட்டுமன்றி கட்சி அங்கத்தவர்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தி கருத்து முரண்பாடுகளைக் கொண்டுவந்தார். தலைமைப் பீடத்தை வெறுப்பூட்டும் வகையில் சூழ்ச்சி செய்தல் இவரின் திட்டமாகும். அதன் முதற் படியாக உபதலைவர் கருஜயசூரியாவை அணுகும் வகையில் அவரால் கொண்டுவரப்பட்ட அமைச்சின் மசோதா ஒன்றுக்கு ஜே.வி.பி எதிர்ப்புத் தெரிவிக்க சனாதிபதி ஆதரவு தெரிவித்துள்ளார். அத்துடன் ஐ.தே.க.வுடன் சனாதிபதி ஒத்துழைக்கிறார் என்ற வதந்தியையும் அவர் பிரபல்யப்படுத்தியுள்ளார். அடுத்து இவரின் உபாயம் தமது உடன்பாடுகளை ஏற்றுக்கொண்ட எம்பிக்களின் பெயர்ப்பட்டியலை வெளியிட்டமையாகும். இதன் மூலம் ஐ.தே.கட்சியின் தலைமைப் பீடத்துக்கும் ஏனைய உறுப்பினர்களுக்குமிடையே முறுகல் நிலையைத் தோற்றுவித்துச் சந்தேகங்களை ஏற்படுத்தி இயற்கையாக மோதலை உருவாக்குவது இவரின் திட்டமாகியது. இது அவருக்கு மிகவும் சிரமமாக இருக்கவில்லை. இதன் மூலம் கட்சிக்குள் பதட்டத்தை ஏற்படுத்துவது ஒன்றும் புதுமையில்லை. இதனால் ஐ.தே.முன்னணி அரசு பதவியிழக்கும்.

அவரின் இந்தத் திட்டம் நிறைவேறுமா என்றால் 17 ஆண்டுகள் நீடித்த ஐ.தே.க. அரசை ஒரு வருடத்தில் வீழ்த்தியதால் இது கடினமாக இருக்க முடியாது. அவ்வாறு வீழ்த்தியது மேல்மாகாண முதல்வராக இருந்து மக்களின் ஆதரவுடனேயே அதை நோக்குமிடத்துத் தமது நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் ஆட்சியைக் கைப்பற்று



வது ஒன்றும் பெரிதல்ல. நாளைக்கே அனைத்து அமைச்சுப் பொறுப்புக்களையும் கையேற்று அரசைக் கைப்பற்ற முடியும். எனினும் அவர் நினைப்பது மக்களின் ஆதரவோடு அரசைக் கைப்பற்றுவதற்கே. அரசியலமைப்பின் படி அது சுலபம் ஆயினும் அவர் அவ்வாறான செயலில் இறங்கமாட்டார். தமது அரசியல் விசுவாசத்துக்குக் கட்டுப்பட்டவர் விமர்சனங்களுக்கு பயந்தவரும் அல்ல. அப்படிப் பயப்படுவாரானால் இவ்வளவு நடந்ததும் விலகியிருப்பார். ஸ்ரீமாவோவுக்கு ஏற்பட்ட அனுபவத்தைவிட இவருக்கு அதிகமான அனுபவம் ஏற்பட்டது.

அவரையும் அவரின் கணவரையும் கைவிட்ட கட்சி தற்போது தலைமை அளித்துள்ளது. தமது கணவரைக் கொன்ற ஜே.வி.பி.யுடன் கூட்டணி சேர வேண்டியுள்ளது. எல்.ரி.ரி.யுடன் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. ஐ.தே.கட்சியின் ஆட்சியில் சனாதிபதி என்ற வகையில் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டியுள்ளது.

அவர் இவ்வளவையும் செய்வது**பொறுமை**யைக் கடைப்பிடிப்பதாலேயே அன்று சேர் ஜோன் கொத்தலாவல ஸ்ரீமாவோவைக் குறிப்பிட்டது ஓர் ஆண்மகன் என்று. இன்று அவர் உயிருடன் இருந்தால் சந்திரிகாவை என்னவென்று சொல்வாரோ?

**உப்புல் ஜோசப் பர்னாந்து**
**(லங்காதீப)**
**மொழியாக்கம்- *வடிவேல்***

# வருமானம் பெறும் வழிவகைகளை ஆராய திறைசேரியில் இன்று உயர்மட்ட மாநாடு

(கொழும்பு)

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டளவு வரி மூலமான வருமானத்தைப் பெறமுடியாத நிலை உருவாகியிருப்பதையடுத்து வருமானம் பெறும் வழிவகைகளை ஆராயுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த விசேட பணிப்புரைக்கமைய இன்று திறைசேரியில் உயர் மட்ட மாநாடொன்று நடைபெறவுள்ளது.

நிதியமைச்சர் கே.என். சொக்ஸி தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டின் போது உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உட்பட திறைசேரியின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்களின் தலைவர்களும் கலந்துகொள்ள வேண்டும் என திறைசேரி பணிப்புரை விடுத்துள்ளது.

எவ்வாறாயினும் திறைசேரி திரட்ட தவறியிருக்கும் சுமார் 72 மில்லியன் ரூபா பெறுமதியான வரி வருமானத்தை வேறு விசேட வரியொன்றை அறிமுகப்படுத்தி அதன் மூலம் பெற உத்தேசித்திருக்கும் திறைசேரி இந்த முறை குறித்தே இன்றைய பேச்சுவார்த்தையில் ஆராயத் தீர்மானித்திருக்கிறது என தெரிவிக்கப்படுகிறது.

2003ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் படி இறக்குமதி உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகளில் இருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட வரியாக 120 மில்லியன் ரூபா திரட்டத் தீர்மானிக்கப் பட்டது. ஆனால் இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலத்தில் 'வற்' வரியாக 48 மில்லியன் ரூபாவே திரப்பட்டிருப்பதால் இது முதல் ஆறு மாத காலத்தில் எதிர்பார்க்கப்பட்டதை விட இந்தத் தொகை 12மில்லியன் ரூபாவினால் குறைந்திருப்பதாலும் மாற்று வரி வருமானம் பெறும் முறைகளை அமுல்படுத்த திறைசேரி உத்தேசித்து வருகிறது.

## புதிய தளபதி நியமனம்

(கொழும்பு)

யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக எதிர்வரும் 25ஆம் திகதி முதல மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க புதிதாக நியமனம் பெறவுள் ளார்.

தற்போதைய ராணுவத் தளபதி சரத்பொன்சேகா அடுத்த மாதம் முதலாம் திகதி வெளிநாட்டுப் பயணமொன்றை மேற்கொண்டு செல்லவுள்ளதாக பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாதுவையில் கோர விபத்து; ஒரே குடும்பத்தில் மூவர் பலி!

(கொழும்பு)

வாதுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

களுத்துறையில் இருந்து வேகமாக வந்த லொறி ஒன்றே மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இவர்கள் மீது மோதியதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்து அப்பகுதியில் பதற்ற நிலையை உருவாக்கியுள்ளது.

# சுவாமி விபுலானந்தர் நினைவு தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு

மண்டூர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரின் 56 ஆவது நினைவு தினம் கடந்த சனியன்று நினைவு கூரப்பட்டுள்ளது. மட்டக்களப்பு நீதிமன்ற சதுக்கத் தில் நிறுவப்பட்டுள்ள சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

கல்லடி உப்போடையில் அமைந்துள்ள அடிகளாரின் சமாதியிலும் மலர்தூவி அங்கு பிரார்த்தனையும் செய்யப்பட்டுள்ளது. சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழாச் சபையினர், சிவானந்தா தேசியப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இந் நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளனர். சுவாமியின் பிறந்த இடமான காரைதீவு கிராமத்திலும் நினைவுதின நிகழ்வுகள் இடம்பெற்றன.

# சுய கல்விக்கான மென்பொருட்கள்


அறிவியல் உலகில்

பல பயன்பாட்டுமென்பொருட்கள் பற்றிக் கடந்த சிலவாரங்களாகப் பார்த்தோம். இம் மென்பொருட்கள் பல்வேறு துறைகளுக்கு மென தயாரிக்கப்பட்ட அதேவேளை தனித்தும் இணைந்தும் பயன்பாட்டாளரின் தேவைகளைப் பூர்த்தி செய்வனவாக இம்மென்பொருட்கள் அமைந்திருந்தன. இம்மென்பொருட்கள் இவ்வளவுடன் முடிவடைந்து விடவில்லை. அவை பல்வேறு தேவைகளுக்காகவும் உருவாக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டுக்கொண்டிருப்பதால் பல ஆயிரக்கணக்கில் மென் பொருட்கள் தயாரிப்பு விரிவடைந்துகொண்டு செல்கின்றது.

இவற்றுக்கு உதவியாக மேலும் பல மென்பொருட்கள் அவை மேற்குறிப்பிட்டவை போல பொதுவான தேவைக்கென ஆக்கப்பட்டவை அல்ல உருவாக்கப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன.


உதாரணமாக இப்பொழுது தமிழ் எழுத்துக்களை **(Fonts)** கொண்ட பல மென்பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. பல்வேறு வடிவங்களில் அமைந்த எழுத்துருக்களைக் கொண்டவையாக இந்த மென்பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றை நாம் சொற்தொகுப்புகள் முதல் பல்வேறு பயன்பாட்டு மொழிகளுக்கான மென்பொருட்களுடன் இணைத்துப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

உதாரணமாக அச்சுத்துறையில் பயன்படுத்தப்படும் பேஜ்மேக்கர் மென்பொருளுடன் இணைந்து இம்மென்பொருட்களைப் பயன்படுத்துவதன் மூலம் வெவ்வேறு வடிவங்களிலான எழுத்துக்களை அச்சிடப்பயன்படுத்தலாம்.




அதேவேளை வாழ்த்து அட்டைகள் அழைப்பிதழ்கள், சான்றிதழ்கள், புத்தகங்கள் போன்றவற்றை அச்சிடும் போது அவற்றில் இணைக்கப்படக் கூடிய ஓவியங்களை நாம் வரைந்துகொள்வது என்பது சிரமமானதும் நேரத்தைப் பெருமளவில் எடுக்கும் செயலாகும். இப்பிரச்சினையை நிவர்த்தி செய்ய இவ்வாறான நூற்றுக்கணக்கான ஓவியங்கள் அடங்கிய மென்பொருட்கள் பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அதேபோலவே புகைப்படங்களும் பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவற்றைக் கொள்வனவு செய்து வைத்திருப்பதன் மூலம் வெளியீடுகளை அழகாகவும், குறைந்த செலவிலும் இலகுவிலும் வெளியிட முடிகிறது.

இதேபோல் புத்தகங்களுக்கு இணையான உண்மையில் அவற்றிலும் இலகுவில் பயன்படுத்தக்கூடிய கல்விசார் மென்பொருட்களும் விற்பனைசெய்யப்படுகின்றன. உதாரணமாக ஆத்திசூடி, கொன்றைவேந்தன், போன்றவை எழுத்துருவிலும், ஓவியவடிவிலும் ஒலிவடிவிலும் கூட மென்பொருட்களாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இதேபோல திருக்குறள் அதற்கான விளக்கங்கள் ஒலி ஒளிவடிவில் மென்பொருளாக தயாரிக்கப்படுகின்றன. இதனால் புத்தகங்களையும் விட இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும் அத்துடன் இம்மென்பொருட்களில் எமக்குத் தேவையான விடயங்களைத் தேர்ந்தெடுப்பதும் சுலபமாகும்.





இதேவேளை பெருமளவான கல்விசார் மென்பொருட்களும் வெளியிடப்படுகின்றன. மொழிகள், தொழில்நுட்பம், விஞ்ஞானம், உளவியல், தர்க்கவியல், சமூகவியல், தகவல் தொழில்நுட்பம், இயந்திரவியல், மருத்துவம் எனப்பல்வேறு துறைகள் தொடர்பான கற்கைகள் கூட மென்பொருட்களாக தயாரிக்கப்படுகின்றன. எந்தவொரு விடயத்தையும் தாமாகக் கற்கக்கூடிய **(Teach your self)** வகையில் இம் மென்பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

கணினிகளிலுள்ள பல்லூடக **(Multimedia)** வசதிகளைப் பயன்படுத்தி எழுத்து வடிவங்களாக மட்டுமல்ல ஒலிஒளி வடிவங்களாகவும் இம்மென்பொருட்கள் தயாரிக்கப்படுவது கற்றலை இலகுபடுத்துகின்றது.


அத்துடன் இம்மென்பொருட்களில் சுய பரீட்சைகளும் அமைக்கப்பட்டுள்ளன. நாம் கற்றவற்றில் கணினி எழுப்பும் வினாக்களுக்கு நாம் பதிலளிக்கும் போது அவற்றை கணினியே சரிபார்த்து உடனடியாக பெறுபேற்றையும் தந்துவிடுகிறது. பரீட்சை வைப்பதற்கென்றே தனியான மென்பொருட்களும் உண்டு.

இதேவேளை கலைக்களஞ்சியங்கள் அகராதிகள் என்பனவும் குறுந்தட்டுக்களில் பதிவு செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தடித்த 15க்கு மேற்பட்ட புத்தகங்களைக்கொண்ட கலைக்களஞ்சியத் தொகுதிக்குப் பதிலாக இரண்டு குறுந்தட்டுக்களில் அதிலுள்ள தகவல்கள் அசையும் காட்சிகள் ஒலிகளுடன் குறுந்தட்டுக்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இம்மென்பொருட்களில் எமக்குத் தேவையான




விடயங்களைத் தேடித்தர செயந்திரங்களும் உள்ளதால் அவற்றின் உதவியுடன் நாம் இலகுவில் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

இவற்றைவிட இன்று உலகளாவிய ரீதியில் பெருமளவானோர் பயன்படுத்துவது விளையாட்டு மென்பொருட்களாகும் பொழுதுபோக்குக்குரிய ஒன்றாக கணினியில்




இணைத்துக்கொள்ளப்பட்ட இவை இப்போது இளம் தலைமுறையினருக்கு கேடுவிளைவிக்கும் ஒன்றாகக்கூறப்படுகிறது. பெருமளவு கணினிகளை வீட்டுப்பாவனைப்பொருளாகப் பயன்படுத்தும் நாடுகளில் சிறுவர்கள் கணினி விளையாட்டுக்களுடன் தமது காலத்தை வீணாக்குவதால் ஏனைய விடயங்களில் அவர்களால் ஈடுபாடுகாட்டமுடியாது உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் பொழுதுபோக்கை முக்கியமான ஒன்றாகக் கருதும் காரணத்தால் இவ்வகை மென்பொருட்களும் பெருமளவில் தயாரிக்கப்பட்டே வருகின்றன.

**- சி.சிவபாலன்**

# அதிகரித்துவரும் குற்றச் செயல்களைத் தடுக்க பொலிசாருக்கு வசதிகளை வழங்க உத்தரவு

(கொழும்பு)

அதிகரித்து வரும் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கு உரியவகையில் பொலிஸ் நிலையங்களுக்கு பலவித வசதிகளைச் செய்து கொடுப்பதுடன் பொலிசாருக்குப் பதவி உயர்வுகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என பிரதமர் அலுவலகம் விடுத்திருக்கும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராசா மற்றும் பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சித் அபேசூரிய ஆகியோரோடு கலந்தாலோசித்து சிறிலங்காப் பொலிஸ் துறைசார் முடிவுகளையும் தீர்மானங்களையும் எடுத்திருக்கின்றார்.

பிரதமர் விடுத்திருக்கும் தகவல்களின் படி பிரதமரின் இந்தத் தீர்மானத்திற்கு இணங்க இதுவரை காலமும் பொலிஸ் துறையில் முறையாக வழங்கப்படாமல் இருந்த அத்தனை பதவியுயர்வுகளையும் ஆராய்ந்து அவற்றை அவசரமாக நிறைவேற்றும் திட்டமும் அமுல் படுத்தப்படவிருக்கின்றது.

இந்த முதல் கட்ட நடவடிக்கையோடு பொலிஸ் துறையில் தகுதி அடிப்படையில் புதிதாக சிறப்பு மேலதிக எண்ணிக்கைப் பதவிகளும் வழங்க பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ ஆணைக்குழுத் தலைவருடனான சந்திப்பில் பிரதமர் தீர்மானமெடுத் திருக்கின்றார்.

அத்தோடு, நாடளாவிய ரீதியில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கென்று முனைப்போடு அமைக்கப்பட்டிருக்கும் சகல பொலிஸ் காவலரண்களையும் பொலிஸ் நிலையமாகத் தரமுயர்த்தவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிப் பொலிஸ் நிலையமாக மாறும் தலா ஒவ்வொரு பொலிஸ் காவலரணுக்கும் தொடர்சேவைக்கென ஒரு ஜீப் வண்டியும் வழங்கப்படும்.

இவை தவிர, தற்போது வெறும் இரண்டு ஜீப் வண்டிகளுடன் மாத்திரமே இயங்கும் ஏ1,ஏ2,ஏ3 தரத்திலான பொலிஸ் நிலையங்களுக்கு மேலதிகமாக ஒரு ஜீப் வண்டியை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதோடு, மேற்பார்வைப் பணியில் ஈடுபட்டிருக்கும் சகல உதவி பொலிஸ் அத்தியட்சகர்களுக்கும் புதிதாக ஒவ்வொரு ஜீப் வண்டியை வழங்கவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

# பரீட்சையில் சித்தியடைந்தோர் டிசம்பரில் பல்கலை அனுமதி

(கொழும்பு)

இவ்வருட முற்பகுதியில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்கள் இவ்வருடம் டிசம்பர் மாதம் 8ஆம் திகதி அளவில் பல்கலைக்கழகங்களில் சேர்ந்து கொள்ள முடியும் என்று பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் தகவல் தருகையில், பல்கலைக் கழகங்கள் பலவற்றில் புதிய பாட நெறிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு இந்துக்கல்லூரி மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில உயர்தர வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வியை மேற்படுத்தும் பொருட்டு கனடா ரொறன்ரோ நகரில் இயங்கும் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நிதி உதவிகளை வழங்கியுள்ளது.

இவ்வுதவித்திட்டத்தின் கீழ் வசதி குறைந்த ஏழைமாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு மாதாந்தம் 500 ரூபாய் வீதம் புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது. இவர்களில் ஐந்து மாணவர்களுக்கான நிதி உதவியை ரொறன்ரோவில் உள்ள பழைய மாணவர்களும், இரு மாணவர்களுக்கான உதவியை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர்களான இரு வைத்தியர்களும் வழங்கி வருகின்றனர்.

இத்திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கில் இவ்வருடம் மேலும் எட்டு மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்காக 81 ஆயிரம் ரூபாவை கனடாவில் உள்ள இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள் அனுப்பியுள்ளனர். என இப்புலமைப்பரிசில் திட்டத்தின் இணைப்பாளர் டாக்டர் என். சயனொளிபவன் தெரிவித்தார்.

# கிராமிய புனரமைப்புத் திட்டச் சந்திப்பு

நிகொட் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பெறும் பாரதிபுரம் கிராமிய புனரமைப்பு வேலைத்திட்ட சந்திப்பு பாரதிபுரம் கிளி/பாரதி வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக் கிழமை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவரும் சமூக பொருளாதார அபிவிருத்திக்குழு உபதலைவருமான இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் கலந்துகொண்டார். மக்கள் பங்கேற்புடன் இக்கிராம அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நடைபெறவுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இக்கிராமத்தின் தேவைகளை மக்களுடன் இணைந்த வகையில் இனங்கண்டு முன்னுரிமைப்படுத்தியுள்ளது. அந்த வகையில் வீடு, குடிநீர் வருமான பெருக்கம் போன்றவைகளைத் தெரிவித்துள்ளது.

இந்நிகழ்வில் நிகொட் நிறுவன பொறியியலாளர் கேதுகநாதன் பாரதிபுரம் மலையாளபுரம் கிராம அலுவலர், தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்டப் பணியாளர்கள், விவசாயப் போதனாசிரியர், கிராம பங்கேற்புக்குழுக்கள், கிளிநொச்சி ஊரகவளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் அன்புமாறன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நியாப் திட்டத்தின் சமூக வலுவூட்டல் இணைப்பாளர், கிராமிய வலுவூட்டாளர்கள் மற்றும் துறைசார்ந்த அலுவலர்கள், பாரதிபுர வித்தியாலய அதிபர் மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நாடு தற்போதைய சூழ்நிலையில் உருப்படுமென நான் நினைக்கவில்லை!

## - சனாதிபதி சந்திரிகா அபிப்பிராயம்

(கொழும்பு)

**"தற்போதைய சூழ்நிலையில் நாடு உருப்படும் என நான் நினைக்கவில்லை. நாடெங்கும் கொலை கலாச்சாரம் மலிந்து காணப்படுகின்றது. கொலைகாரர்கள் அரசியல்வாதிகளின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்." இவ்வாறு சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த வெள்ளிக்கிழமை இரத்தினபுரியில் பேசுகையில் கூறியுள்ளார்.**

இரத்தினபுரி புதிய நகரத்தில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத வைத்தியசாலையில் 5 கோடி 21 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட புதிய வார்ட்டு ஒன்றினை உத்தியோக பூர்வமாகத் திறந்து வைத்து கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றினார்.

1994ஆம் ஆண்டு பதவியேற்ற எனது அரசாங்கம், கல்வி, சுகாதாரம், விவசாயத்திற்கு முன்னுரிமை அளித்தது. எனினும் இதற்கென விசேட செயற்திட்டங்களும் அமைத்தன.

எனினும் இன்று இந்த செயற்திட்டங்கள் அனைத்தும் கைவிடப்பட்டுள்ளன. நாட்டில் வட-கிழக்கு உட்பட 10,000 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 8500 பாடசாலைகள் மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

இதற்குப் பெரும் நிதி தேவைப்படுகின்றன. எனினும் மத்திய அரசாங்கம் பாரிய நிதிக் குறைப்புச் செய்கின்றது. இதனால் புதிய கல்வி சீரமைப்பு முன்னெடுத்துச் செல்ல முடியாதுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் நாடு உருப்படும் என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில், சிறு பிரச்சினைகளுக்குக்கூட துப்பாக்கிகளை கையில் ஏந்துகின்றனர். கொலை கலாச்சாரம் மலிந்து காணப்படுகின்றது. அத்துடன் கொலைகாரர்கள் அரசியல்வாதிகளின் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

மோசடிகள், வன்முறைகள், சட்டவிரோதச் செயல்கள், கசிப்பு, போதைப்பொருட்கள் தாராளமாக விற்பனை செய்யப்படுகின்றன. நாடு இதனால் குட்டிச் சுவராகிப்போயுள்ளது.

தீவைப்பு சம்பவங்கள் துப்பாக்கி கலாச்சாரம் தொடர்கின்றன. இது தொடருமாயின் நாம் வனவிலங்குகளாக மாறிவிடுவோம் என்றார்.

## சிப்பாய் கைது!

(கொழும்பு)

வங்கிக் கொள்ளைகள் உட்படப் பல 'குற்றங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஒருவரை மாத்தறைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இராணுவத்தில் இருந்து தப்பியோடிய இவர் பல்வேறு கொள்ளைகளுடன் தொடர்புடையவர் என மாத்தறைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## கசிப்பு விற்பனையாளருக்கு ஆறுமாத சிறைத்தண்டனை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்ட போது கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதியாளர் அவர்களால் ஆறுமாத கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதியாளர் செந்தூரனால் மேற்படி நபருக்கு ஆறுமாத சிறைத்தண்டனையும் 5000ரூபா குற்றப்பணமுமாக கடந்த 17ஆம் திகதி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. குற்றப்பணம் கட்டத்தவறும் பட்சத்தில் 120 நாள் கட்டாய சமூகப்பணியும் செய்யப்படவேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் 18 போத்தல் கசிப்புடன் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். என்பதும் குறிப்பிடத்தக்கது. (12)

## விவசாயப் பயிற்சி நெறி

உலக உணவு ஸ்தாபன அனுசரணையுடன் விவசாய திணைக்களத்தினால் சுழற்சி முறையில் நடத்தப்பட்டுவரும் விவசாயப் பயிற்சி நெறி கடந்த வியாழனன்று முழங்காவில் விவசாய போதனாசிரியர் பிரிவில் போதனாசிரியர் மா. விஜிந்தன் தலைமையில் இடம் பெற்றது.

சிறுதானியங்களின் பயிராக்கவியல் பற்றி பாடவிதான உத்தியோகத்தர் ந. செல்வராஜாவினாலும் வீட்டுத் தோட்ட செய்கை பற்றி விவசாய உத்தியோகத்தர் ந. கந்தசாமியாலும் விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து விவசாயிகளின் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

## செயற்கை முறை சினைப்படுத்தல் பயிற்சியை வழங்க உறுதியளிப்பு

(ஒட்டுசுட்டான்)

வடக்கு-கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளர் க. சிவலிங்கம் வடமாகாண செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். ஞானசேகரன் கிளிநொச்சி கால் நடை வைத்தியர் வடமாகாண உதவிப் பணிப்பாளர் ஆகியோர் காராளி செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

கடந்த வியாழனன்று காலை சென்ற இவர்கள் இச்சேவையினைப் பாராட்டியுள்ளதோடு குண்டகசாலையிலிருந்து நல்லினக் காளை மாடுகளை தருவதாக உறுதியளித்துள்ளனர்.

அத்தோடு செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவை பயிற்சி நெறியினை வழங்குவதாகவும் உறுதியளித்து சென்றுள்ளனர். (05)

## வடக்கு—கிழக்கைப் பிரிக்குமாறு கோருவது முஸ்லிம்களுக்கு ஆரோக்கியமானது அல்ல!

### -பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவுத்

வடக்குக் கிழக்கு மாகாணத்தை தனித்தனியாக பிரிக்குமாறு கோரிக்கை விடுவது முஸ்லிம்களின் தனித்துவமான அரசியல் ஆதிக்கத்திற்கு ஆரோக் கியமானது அல்ல என்று முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும், வீடமைப்புப் பிரதி அமைச்சருமான பசீர் சேகு தாவுத் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்கள் தமது அரசியல் தனித்துவத்தையும் நலனையும் காத்துக்கொள்வதற்காகத் தனி அலகுக் கோரிக்கையை முன்வைப்பதில் நியாயம் உள்ளது. ஆனால் இதற்காக, வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் பிரிக்குமாறு கோருவதில் எந்தவித நியாயமும் இல்லை என்று கூறிய அவர்,

வடக்கு கிழக்கு மாகாணத்தை நிபந்தனையுடன் இணைக்குமாறு ஒரு தடவையும், நிபந்தனை இன்றிப் பிரிக்குமாறு இன்னொரு தடவையும் தனியலகு தருமாறு மற்றுமொரு தடவையும் மூன்று விதமாக கோரிக்கைகளை முன்வைப்பது முஸ்லிம்களின் உறுதியான அரசியல் நடவடிக்கைக்கு இழுக்கு ஏற்படுத்துவதாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

## அதாவுல்லாவின் கருத்துக் குறித்து சந்திரநேரு விசனம் தெரிவிப்பு

வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரிக்க வேண்டும் என்று அமைச்சர் அதாவுல்லா கூறிய கருத்துக் குறித்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு விசனம் வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் அதாவுல்லாவின் கருத்து தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை கொச்சைப் படுத்தும் ஒரு செயல் என்று அவர் கூறியுள்ளார்.

வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களான தமிழ்-முஸ்லிம்களது பிரிக்கமுடியாத தாயகம் என்பது தந்தை செல்வா முதல் தேசியத் தலைவர்வரை ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து என்பதையும் சந்திரநேரு வலியுறுத்தினார்.

## பொதுச்சந்தையில் கழிப்பறை அமைக்க முன்வருவார்களா?

(உடையார்கட்டு)

உடையார்கட்டு பொதுச்சந்தையில் பொதுக் கழிப்பறை வசதி செய்து கொடுக்கப்படாமல் இருப்பது குறையாகவே காணப்படுகிறது.

நுகர்ச்சித் தேவைக்காக வரும் மக்கள், நிலையான வாணிபம் செய்வோர், வாணிப நோக்கத்திற்காக பல இடங்களிலிருந்து வருவோர் என பலரும் கழிப்பறை வசதியின்மையால் சிரமப்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

மேலும் மக்கள் அதிகம் கூடுமிடம் அங்காடி ஆதலால் ஒரு பொதுவான கழிப்பறை அமைத்து குறையை நிவர்த்திசெய்ய அதிகாரிகள் ஏன் முன்வரவில்லையென மக்கள் வினவுகின்றனர். (19)

## சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாணவர்களுக்கு பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி அக்கராயன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தின் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கான பயிற்சி வகுப்பொன்று கடந்த சனியன்று அதிபர் ஆ.கருணாநிதி தலைமையில் இடம்பெற்றது.

மாவட்ட ஆணையாளர் வே. சிறீதரன் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற பயிற்சி வகுப்பில் உதவிப் பூச்சியியலாளர் ம. இராசதுரை விரிவுரையாற்றினார்.

விசர்நாய்க்கடி தற்பாதுகாப்பு, பொறுப்புள்ள மாணவர்களை உருவாக்குதல் எனும் விடயங்கள் பற்றி விரிவுரை இடம்பெற்றது.

## விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

கண்டியில் வைத்துக் கைது செய்யப்பட்ட வெளிநாட்டுப் பிரஜைகளைச் சட்டவிரோதமாக வெளிநாடு அனுப்ப முயன்ற பிரதான சந்தேக நபரைக் கைதுசெய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதுவரை கிடைத்த தகவல்களின் படி பிரதான சந்தேக நபர் இந்திய நாட்டவர் எனத் தெரிய வந்துள்ளதாகக் கண்டிப் பொலிஸ் தலைமைப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.


தமிழீழ நுண்கலைக் கல்லூரி

முல்லை. மாவட்டம் - முள்ளியவளை.

ப.இலக்கம்-வ.கி.மா/க.அ./பண்/முள்ளி/120/2001

அழகியல் பிரிவின் இரண்டாவது தொகுதி

பயிற்சி நிறைவும், கண்காட்சியும்

காலம்-24,25-07-2003 காலை 9.00 முதல் மாலை 5.00 வரை.

இடம்- முள்ளியவளை நுண்கலைக் கல்லூரி கலா மண்டபம்.

அனைவரும் வருக

(3459) -நிர்வாகம்.



5ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில்
10 □ 12 □ 1978



தாயக மண்ணில்
22 □ 07 □ 1998

2ஆம் லெப்ரினன்ட் கரிகாலன்

[துருமலிங்கம் முரளிதரன்]

(கிளி. மத்திய கல்லூரி உயர்தர மாணவன்)

பாசத்தின் உறவே உன்னை தினம்
நினைத்து உருகும் எம் விழிகள்
இன்னமும் காயவில்லை தேசத்தில் நீ
திரிந்து நடந்த பாதச்சுவடுகள்
இன்னமும் அழியாமல்
தினமும் நினைவூட்டுவதால்
நிம்மதியடைகின்றோம்.

ஓடிப்போன உன் கால நினைவுகளை
சுமக்கும் எம் இதயங்கள்
பாரமாய் கனக்கிறது.
கார்த்திகையில் வந்து உன்
இலட்சியக் கனவை
உறுதி செய்கிறோம்.
கதறியழுது கல்லறை மீது
சிந்தும் கலந்த விழிநீரில்
எம் உயிரனுவின் உடன் பிறப்பின்
தாகமிருக்கும்.

கரிகாலா நீ மலர்ந்த
கருவறைப் பூக்களின் இதழ்களில்
நிதமும் உன் முகம் தெரிவதனால்
நொந்தழும் இதயத்தை மெல்லத்
திருப்திப்படுத்துகின்றோம்
தம்பி உன்
அழியா நினைவோடு.

தகவல்:
13, ஆனந்தபுரம்,
கிளிநொச்சி. (சி-8308) குடும்பத்தினர்.

## சிந்தனைக்கு



சிங்கள அரசின் திட்டமிட்ட ஒடுக்குமுறை காரணமாகவே நாம் சுயநிர்ணய உரிமைக்காகவும், அரசியல் சுதந்திரத்திற்காகவும் போராட்டத்தில் குதித்தோம்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 22-07-2003

# மாற்றீடாகக் கொள்ளத்தக்கதல்ல!

விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கான கோரிக்கை தொடர்பாக அரசாங்கம் முன்வைத்துள்ள புதிய திட்டவரைவானது, விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் அத் திட்டவரைவில் உள்ளடக்கப்பட்டுள்ள அம்சங்கள் குறித்த தகவல்களும்/ஊகங்களும் வெளிவரத் தொடங்கியுள்ளன. 'இரகசியம' என்ற ரீதியில் பரிமாறப்பட்ட இத்திட்ட வரைவு குறித்து வெளியாகும் தகவல்கள் உண்மையாயின் அதன் அடிப்படையில் சில விடயங்கள் சுட்டிக் காட்டத்தக்கதாக இருக்கும்.

அதற்கு முன் இத் திட்டவரைவு உத்தியோக பூர்வமாக வெளியிடப்படாத நிலையிலும், விடுதலைப்புலிகள் இத் திட்டவரைவு குறித்து அபிப்பிராயம் எதையும் வெளியிடாத நிலையிலும் இத்திட்ட வரைவின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எத்தகையதாக இருக்கும் என்பது குறித்து இங்கு அபிப்பிராயம் கூறுவதில் அர்த்தம் எதுவுமில்லை. உத்தியோகபூர்வமாக திட்டவரைவு வெளிவந்த பின்னரும் விடுதலைப்புலிகள் இது குறித்து தமது அபிப்பிராயத்தை வெளியிட்ட பின்னருமே இதன் அடுத்த கட்டம் குறித்துச் சிந்திக்க முடியும்.

அத்தோடு, தற்பொழுது வெளியாகியுள்ள தகவலின்படி இத் திட்டவரைவு குறித்து முழு அளவிலான அபிப்பிராயத்தையோ அன்றி கருத்தையோ இங்கு முன்வைப்பதும் நோக்கமல்ல. ஆனால், இத்திட்டவரைவு விடுதலைப்புலிகள் கோரிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் பண்புகளைக் கொண்டுள்ளதா என்பதை மட்டும் பார்ப்பதே நோக்கமாகும்.

முதலில் அரசாங்கம் விடுதலைப்புலிகள் கோரியதான "இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு" என்பதற்காக முன்வைத்துள்ள திட்டவரைவு 'தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பு' என்பதாகவே உள்ளது. அதாவது இடைக்காலம் என்பதை தற்காலிகம் என மாற்றம் செய்துள்ளதன் மூலம், மிகவும் பலவீனமானதொரு கட்டமைப்பையே அரசாங்கம் முன்வைத்துள்ளது எனலாம்.

இடைக்காலம் என்பதே குறுகிய காலத்திற்கு- அதாவது நிரந்தரத் தீர்விற்கான காலம் வரையிலானது என்பதாகவே அர்த்தம் கொள்ளத்தக்கதாக இருக்கும். ஆனால், தற்பொழுது அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளின் அடிப்படையில் - தற்காலிகமானது என்பது எவ்வேளையிலும் அதன் ஆயுட்காலம் முடிவிற்குக் கொண்டுவரத்தக்கதாகும்.

இந்த வகையில் பார்க்கையில் இத் 'தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பானது' சிறிலங்கா அரசாங்கத்தினால் எவ்வேளையிலும் கலைத்து விடத்தக்க பலவீனமானதொரு நிலையிலேயே அமையக் கூடியதாகும். இது மாத்திரமல்ல, இந் நிர்வாகக் கட்டமைப்பின் உட்கட்டுமானமானது விடுதலைப்புலிகள் நிர்வாகப் பொறுப்பெற்பினும் அவர்களின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு - தமிழ் மக்களின் அபிலாசையைத் தீர்த்து வைப்பதற்கான செயற்பாட்டிற்கு ஏற்றதொன்றாக இருக்கப் போவதில்லை. எடுத்துக் காட்டாக இத்தற்காலிக நிர்வாகக் கட்டமைப்பின் தலைமைப் பதவி குறித்து அரசாங்கம் தெரிவித்துள்ள யோசனைகள் இங்கு கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இத்திட்ட வரைவை தயாரித்த போது அரசியல் யாப்பிற்கு மாறான விதத்தில் இத்திட்ட வரைவு இருத்தல் கூடாது என்பதில் அக்கறை கொண்டதாக இருந்திருக்கலாம். ஆனால், இவ் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பின் நோக்கம்/தேவை என்பன குறித்து அது கருத்திற் கொண்டதாகத் தெரியவில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கம் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்த கோரிக்கையை முன்வைத்த போதே தற்போதைய அரசியல் யாப்பிற்கு அப்பாற்பட்ட விதத்தில் விடுதலைப்புலிகளின் பெரும் பங்கேற்போடு வடக்கு-கிழக்கிற்கான அரசியல் நிர்வாகக் கட்டமைப்பாகவே கோரியிருந்தனர். ஆனால், அரசாங்கம் தற்பொழுது முன்வைத்துள்ள திட்டமானது புலிகளின் கோரிக்கையை உள்ளடக்கியதாகத் தெரியவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முன்வைத்துள்ள திட்டவரைவானது அரசியல் யாப்பிற்கு உட்பட்டதென்பதைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே வலியுறுத்தத் தொடங்கியுள்ளார். இதன் பிரகாரம் இத்திட்டவரைவை அமுல் செய்ய அரசியல் யாப்புத் திருத்தம் அவசியம் இல்லை என்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாடாகும். இருப்பினும் சனாதிபதி சந்திரிகாவின் அடுத்த கட்ட நடவடிக்கையே இதனைத் தீர்மானிப்பதாக இருக்கும்.

மேலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் முன்வைத்துள்ள திட்டவரைவானது அரசியல் யாப்பிற்கு உட்பட்டதோ இல்லையோ அது மிகவும் பலவீனமானது. விடுதலைப் புலிகள் கோரிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் கோரிக்கைக்கு மாற்றீடாகக் கொள்ளத்தக்கதல்ல. ஆனால், விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தின் பரிசீலனையில் அரசின் திட்டவரைவு உள்ளதினாலும், இத்திட்ட வரைவு குறித்து உத்தியோகபூர்வ தகவல் கிடைக்கப் பெறாமையினாலும் இதற்கு மேற்பட்ட விதத்தில் அபிப்பிராயம் தெரிவித்தல் பொருத்தப்பாடானதாக இருக்கமாட்டாது.

# பதினேழாவது திருத்தச் சட்ட மூலத்தை விரைவில் அமுலாக்க அரசு முயற்சி!

(கொழும்பு)

அரசியலமைப்பின் 17ஆவது திருத்தச் சட்டமூலத்தை உடனடியாக அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அரசியலமைப்புச் சபை, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு போன்றவற்றை அமைப்பதில் அரசாங்கம் சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவுடன் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதால், திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மேற்படி குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதில் சில ஆலோசனைகளை சனாதிபதி முன்வைத்துள்ளார். அரசாங்கம் சனாதிபதியின் ஆலோசனைகளை ஏற்று நடைமுறைச் சாத்தியமான விதத்தில் இது விடயத்தில் செயற்படத் தொடங்கியுள்ளது. அதன்படி அரசியலமைப்புச் சபை விஸ்தரிக்கப்படவுள்ளதென்று அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியுள்ளார்.

இந்தக் குழுக்களில் இணைந்து கொள்பவர்கள் தமது சொத்து விபரத்தையும் பொலிஸ் அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கு சனாதிபதியின் திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

# வருடமொன்றிற்கு 4000 படையினர் படைப்பிரிவுகளிலிருந்து வெளியேற்றம்

## - சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

ஒவ்வொரு வருடமும் 4000 ராணுவத்தினர் படையில் இருந்து வெளியேறி வருகின்றனர். இவ்வாறு வெளியேறுவோரை சட்டவிரோதமாக செயற்படும் சக்திகள் குற்றச்செயல்களில் ஈடுபடுத்தி வருவதாக சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நாட்டின் ராணுவமும் தாங்கள் வைத்திருக்கும் ஆயுதங்கள் சம்பந்தமாகவோ ராணுவ வீரர்களின் எண்ணிக்கை தொடர்பாகவோ எந்தச் சந்தர்ப்பத்திலும் திருப்தியடைய மாட்டாது.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நாட்டில் தற்போது நிலவும் சமாதான சூழ்நிலை தொடர்ந்தும் இடம்பெறும் என நான் நம்புகின்றேன்.

2000ஆம் ஆண்டில் பாரிய பீரங்கிகளை உபயோகித்து தாக்குதலை நடத்தியிருந்தாலும் புலிகளை சாதாரண பொதுமக்களில் இருந்து இனங் கண்டு கொள்வது கஷ்டமாக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

# சோதிடர்கள் ஆலோசனையின் பேரில் சனாதிபதி மாளிகையினுள் மாற்றம்

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகாவின் ஜாதகப்படி தற்போது சுக்கிரன் உச்சத்தில் இருப்பதாக சோதிடர்கள் ஆருடம் தெரிவித்திருப்பதை அடுத்து சனாதிபதியின் வாசஸ்தலமான சனாதிபதி மாளிகையில் பொருட்கள் அனைத்தும் வாஸ்து சாஸ்திர முறைப்படி மாற்றப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

சனாதிபதி மாளிகையின் தளபாடங்கள், அலுமாரிகள் உட்பட பல பொருட்கள் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9.25 மணியிலிருந்து ஆரம்பித்த சுபநேரம் முதல் மாற்றி வேறிடங்களில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதியின் உத்தியோகபூர்வ மேசை, கதிரைகளும் கிழக்குத் திசை நோக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகள் இடம்பெற்ற போது சனாதிபதியும் நேரடியாக நின்று சில ஆலோசனைகளை வழங்கியதாகக் கூறப்படுகிறது.

# இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இத்தாலி அரசாங்கம் பூரண ஆதரவு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளுக்கு இத்தாலி அரசாங்கம் பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இத்தாலிப் பிரதமர், ரோம் நகரிலிருக்கும் இலங்கைத் தூதுவர் நொட்லிப் பெரேராவைச் சந்தித்து சமாதான முன்னெடுப்புக்களுக்குத் தமது பூரண ஆதரவை நல்குவதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொது அமர்வில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செப்ரெம்பரில் நியூயோர்க் வரும்வேளை, அவரைச் சந்திக்க இருப்பதாகவும் இத்தாலிப் பிரதமர் கூறியுள்ளார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் முகமாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இத்தகவலைக் கூறியுள்ளார்.

# கிளிநொச்சி பொது, மத்திய கல்லூரி மைதானங்களைப் புனரமைக்க ஏற்பாடு

(கொழும்பு)

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானமும் கிளி/மத்திய கல்லூரி மைதானமும் மிக விரைவில் புனரமைக்கப்படவுள்ளன.


சிறிலங்கா கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் அதிகாரிகள் குழு அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்ததை அடுத்து இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இப்புனரமைப்புப் பணியின் முதல் கட்டமாக வீரர்கள் ஓய்வறை, பார்வையாளர் அரங்கு என்பன மைதானத்தில் அமைக்கப்படவுள்ளதுடன் மைதானமும் செப்பனிடப்படவுள்ளது.

இவ்வேலைத் திட்டங்களுக்கான மதிப்பீட்டினையும் வரைபடத்தினையும் தமக்கு உடனடியாக அனுப்பிவைத்தால் தேவையான நிதியைத் தாம் விரைவில் அனுப்பி வைப்பதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகத்திடம் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

# எவரெஸ்ட்டின் உச்சிக்கு ஒலிம்பிக் தீபத்தை எடுத்துச் செல்ல சீனா காத்திருப்பு

உலகின் மிக உயர்ந்த எவரெஸ்ட் சிகரத்தின் உச்சிக்கு ஒலிம்பிக் தீபத்தை எடுத்துச் சென்று சாதிப்பதற்கு சீனா காத்திருக்கிறது.




ஒலிம்பிக் போட்டி ஆரம்பத்திற்கு முன்பாக உலகம் முழுவதும் அதன் தீபம் கொண்டுசெல்லப்படுவது வழக்கம். இந்த வகையில் 2008ஆம் ஆண்டில் நடக்கவுள்ள போட்டிக்கான தீபத்தை எவரெஸ்டுக்கே எடுத்துச் செல்வோம் என்று பீஜிங் மேயர்லீகி சர்வதேச ஒலிம்பிக் குழுவிடம் உறுதியளித்துபரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

கடந்த காலங்களில் ஒலிம்பிக் தீபம் காடு மலை,கடல் கடந்து உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றுள்ளது.ஆனால் உயர்ந்த எவரெஸ்ட் சிகரத்தைத் தொட்டதில்லை.

ஒலிம்பிக் வாய்ப்பை சீனா நீண்ட காலம் காத்திருந்தே பெற்றது. முதலில் 2000ஆம் ஆண்டு சிட்னியிடம் வாய்ப்பை இழந்தது. பின்னர் 2004ஆம் ஆண்டு உரிமையை ஏதென்ஸ் வென்றது. இருபினும் மனம் தளராது போராடிய பீஜிங் 2008 ஆம் ஆண்டின் ஒலிம்பிக்போட்டிக்கான உரிமையைப் பெற்றது.

# ச.தே. சமூகம் ஆளும், எதிர்க்கட்சிகள் மீது அழுத்தம் கொடுக்க முன்வரவேண்டும்

## மட்டு. திருமலை மறை மாவட்ட ஆயர் வலியுறுத்து

சனாதிபதிக்கும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திற்கும் இடையேயான அரசியலமைப்பு ரீதியிலான சட்ட இழுபறி நிலை இனப்பிரச்சினைத் தீர்விற்குத் தடையாகிவிடுமோ என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்லாது சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினர் மத்தியிலும் ஏற்பட்டுள்ளதாக மட்டு. திருமலை மறை மாவட்ட ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்துச் சர்வதேசச் சமூகம் ஆழமாகச் சிந்தித்து இருதரப்பினருக்கும் உரிய அழுத்தங்களைக் கொடுக்க வேண்டுமென்று ஆயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கை, மாலைதீவு, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கானபிரெஞ்சு தூதரகப் பாதுகாப்பு அதிகாரி கேணல் ஜோன்பியர் சிஸ்டிநேக்கர் நேற்றுப் பிற்பகல் ஆயர் இல்லத்தில் நடத்திய சந்திப்பின்போது ஆயர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

பிரெஞ்சு தூதுரகப் பாதுகாப்பு அதிகாரியுடன் இலங்கைக்கான பதில் பிரெஞ்சு தூதுவரும் சென்றிருந்தார்.

ஆயரைச் சந்திப்பதற்கு முன்பாக மின்னேரியாவிலுள்ள 23ஆவது படைப் பிரிவுக் கட்டளை அதிகாரி கேணல் ராஜதரி சில்வா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லசந்த டி சில்வா, மாவட்ட அரசாங்க அதிகாரி மௌனகுருசாமி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள், முஸ்லிம் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

பிரெஞ்சு பாதுகாப்பு அதிகாரி மட்டக்களப்பு மாவட்டத்தின் தற்போதைய நிலைமை, சமாதான முயற்சிகளின் முன்னேற்றம், மக்கள் சமாதான முயற்சிகள் தொடர்பாகக் கொண்டுள்ள நிலைப்பாடு தொடர்பாகவும் அறிவதற்காகவே மட்டக்களப்பு விஜயத்தை மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

கட்டளைத் தளபதி பிரிகேடியர் பாலசூரிய உட்பட பல அதிகாரிகளுடனும் கலந்துரையாடினார். இவர் நாளை வரையும் மட்டக்களப்பில் தங்கியிருந்து பலதரப்பட்ட அதிகாரிகளையும் சந்திப்பார் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

கடந்த 18ஆம் திகதி சிறிலங்காவிற்கு விஜயம் செய்திருந்த இந்த பிரெஞ்சு தூதரகத்தின் படைத்துறை அதிகாரி கொழும்பில் படைத்துறை சார்ந்த பல சந்திப்புக்களையும் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பர்னாண்டோ மற்றும் பல உளவுப் பிரிவு அதிகாரிகளையும் சந்தித்துள்ளார்.

# இஸ்ரேலிடமிருந்து 600 கோடி பெறுமதியான ஆயுதங்கள் சிறிலங்கா கொள்வனவு

(லண்டன்)

இஸ்ரேலிடமிருந்து சிறிலங்கா 600 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய வாய்ப்பு இருப்பதாக படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அண்மையில் இஸ்ரேலுக்குச் சென்ற படைத்துறை அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி ஆகியோர் கடந்த சனிக்கிழமை நாடு திரும்பியுள்ளனர்.

இவர்களின் பயணத்தின்போது 200 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவுள்ளதாக இஸ்ரேலிய ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. எனினும், இந்த விஜயத்தின்போது சிறிலங்கா தரப்பினர் 400 கோடி முதல் 600 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் வாய்ப்பு இருப்பதாக தற்போதைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விஜயத்தின்போது இஸ்ரேலியப் படைத்துறை அமைச்சரைச் சந்தித்துப் பேசிய திலக் மாரப்பன, இஸ்ரேலியப் பிரதமரைச் சந்திக்க இருந்தபோதிலும் தவிர்க்க முடியாத காரணங்களினால் அது நடைபெறவில்லை என்றார்.

ஒரு வாரத்திற்கும் மேலாக இஸ்ரேலில் தங்கிருந்த இவர்கள் இருவரும் இஸ்ரேலின் விமான உற்பத்தி நிறுவனம், கனரக ஆயுதங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் கடற்படைக் கப்பல் கட்டுமானத் தொழிற்சாலைக்கும் விஜயம் செய்து பார்வையிட்டுள்ளனர்.

### குடாநாட்டில்....

சபையினரின் நடவடிக்கையை முடக்கிவிட்டு படையினர் இப்பகுதியைப் பயிற்சியிலீடுபவதற்குப் பயன்படுத்தி வருவதோடு, இப்பகுதியில் பொதுமக்கள் மீது கெடுபிடிகளையும் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதிக்குப் புதிதாகச் செல்கின்ற மக்களைப் படையினர் தீவிர விசாரணைக்குட்படுத்தி உடற்பரிசோதனைக்கும் உட்படுத்திய பின்னரே போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கின்றனர்.

புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு மாறாக மக்கள் குடியிருப்புக்களையண்டிய பகுதியில் படையினர் பயிற்சியிலீடுபடுவது மட்டுமன்றி மக்களை தீவிர இராணுவ நெருக்குதல்களுக்கு உள்ளாக்கி வருகின்றனர்.

### யாழ்.இல்..

ஜெயலத் ஜெயவர்த்தனா கலந்து கொள்ளவுள்ளதாகவும் 55பாடசாலைகளும் 7.2 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக ஜி.ரி.சற் எனப்படும் ஜேர்மனிய அமைப்பின் பிரதிநிதிகளும், ஐரோப்பிய யூனியன் அமைப்பின் பிரதிநிதிகளும் இன்றையதினம் குடாநாட்டுக்கு வருகை தரவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (27)

### இடைக்கால...

இல்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.சனாதிபதியின் அனுமதியின்றி அரசாங்கத்திற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்குவது அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானது என்று தெரிவித்துள்ளார்.

### காக்கைதீவில்...

மீனவரை கடற்கரையில் வைத்துச் சோதனைக்குட்படுத்திய கடற்படையினர் கடற்றொழில் அனுமதியட்டை நீரில் நனைந்திருப்பதால் கடலில் தொழிலில் ஈடுபட முடியாது என்று தடுத்து வைத்திருந்தார்கள்.

இதன்போது படையினருக்கும் கடல் தொழிலில் ஈடுபடச் சென்ற மீனவருக்கும் இடையில் வாய்ச் சண்டை ஏற்பட்டது. இதனால், ஆத்திரமடைந்த படையினர் மீனவரைக் கடுமையாகத் தாக்கியுள்ளார்கள். இதனால் இப்பகுதியில் மாலை வரையும் கடுமையான பதற்றம் நிலவியது.இச்சம்பவத்தை அறிந்த கண்காணிப்புக் குழுவினர் படையினருடன் பேச்சுவார்த்தை நடத்திய போது கடற்படையினர் தங்களை மக்களே தாக்கியதாகவும், சம்பவம் நடந்த சமயம் இப்படைத்தளத்தின் தளபதி அங்கு இருக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர். ஆயினும் இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத்தெரியவருகிறது. (33)

### புலிகளின்...

வேயின் விசேட தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தலைமையிலான குழுவினர் ஐந்து நாள் கழித்து மீண்டும் இன்று கிளிநொச்சிக்கு வருகின்றனர்.

காலை 9.00 மணியளவில் இவர்கள் உலங்குவானூர்தி மூலம் வன்னிக்கு வந்து சேரவுள்ளனர்.

### யாழ்...

த்துச் சோதிக்கப்பட்டுள்ளன. இந்தகைய சோதனை புரிந்துணர்வு உடன் படிக்கைக்கு முன்பு வழமையாக இடம் பெற்று வந்தாலும் அது யாழ். குடாநாட்டிலிருந்து சிங்களப் பகுதிகளுக்குச்செல்பவர்களுக்கே இப்படியான சோதனைக் கெடுபிடிகள் நடைபெற்றுவந்தது. ஆனால் நேற்று தீவகத்திலிருந்து யாழ். நோக்கிவந்து கொண்டிருந்த பயணிகளும் சோதிக்கப்பட்டுள்ளார்கள். (33)


## நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணிக்காக எம்மால் விளம்பரப்படுத்தப்பட்டு விண்ணப்பங்கள் எமக்கு அனுப்பி வைத்த கீழ்வரும் பணி நிலையாளர்களுக்கான நேர்முகத் தேர்வுகள் குறிப்பிடப்படும் திகதிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடுவப்பணியகத்தில் இடம்பெறும். சகல சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சாரதிகள் :26–07–2003 காலை 10.00 மணி*

*மொழி பெயர்ப்பாளர் : 26. 07. 2003 பி. ப 03. 00 மணி*

குறிப்பு: ஏற்கனவே கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களும் ஒப்பந்தக்காலம் முடிவுற்றதால் மீளவும் நேர்முகத் தேர்வுக்கு சமுகம் தரவும்.

*தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,*
*நடுவப்பணியகம்,*
*கண்டிவீதி,*
*கிளிநொச்சி.*

(சி.8435)


# ஈராக்கில் அமெ. படையினர் மீது நேற்று குண்டுத் தாக்குதல்

## படைச் சிப்பாய் உட்பட இருவர் பலி

(பாத்தாத்)

ஈராக்கில் நேற்று இரவு அமெரிக்கப் படையினர் மீது இடம் பெற்ற தாக்குதலில் ஒரு அமெரிக்கப் படைச் சிப்பாயும் ஈராக்கிய மொழி பெயர்ப்பாளர் ஒருவரும் கொல்லப்பட்டுள்ளதோடு மூன்று அமெரிக்கப் படையினர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்கப் படையினரை ஏற்றிச் சென்ற 'கும்வி' ரக வாகனங்கள் இரண்டின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியதோடு, துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலின்போதே இருவர் கொல்லப்பட்டும் மூவர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கதாகும்.



# கருணாகரன் எழுதிய கவிதை நூல்; நாளை அறிமுக விழா

கருணாகரன் எழுதிய 'ஒரு பயணியின் நிகழ்காலக் குறிப்புக்கள்' எனும் கவிதை நூல் அறிமுக நிகழ்வும் விமர்சன அரங்கும் நாளை புதன்கிழமை கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் தலைமையுரையைத் தொடர்ந்து வரவேற்புரை, பிரதி வழங்கல், நூல் விமர்சனவுரைகள் மற்றும் பார்வையாளர்களின் கருத்துரைகள் என்பன நடைபெறவுள்ளன.

# நித்திரை செய்த கான்ஸ்டபிளின் துப்பாக்கி களவுபோனது

கட்டுநாயக்கவிலுள்ள பொலிஸ் பயிற்சி முகாமில் கடமையின்போது நித்திரை செய்த பொலிஸ் கான்டபிள் ஒருவரது துப்பாக்கி களவு போயுள்ளது. கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

# முல்லை .கட்டம் – 1 வைத்தியசாலையில் செவ்வாய்க் கிழமைகளில் 'கிளினிக்'

முல்லை நகரிலுள்ள கட்டம் ஒன்று வைத்தியசாலையில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் நோயாளர்களுக்குரிய சகல கிளினிக்குகளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் புதுக்கடியிருப்பிலுள்ள முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் மருத்துவ அறிக்கை வழங்கப்படும் எனவும் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஜி.சி. தர்மேந்திரா தெரிவித்துள்ளார்.(26)

### சமாதானத்திற்...

தென்தமிழீழத்தின் தமிழர்பிரதேசங்கள் நேற்றுமுற்றாகச் செயலிழந்தன.

ஓட்டமாவடி முஸ்லிம் பிரதேச செயலக பிரிவிலும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. காத்தான்குடி நகரிலும் கணிசமான வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் இயங்கவில்லை. கிழக்கு பல்கலைக்கழகம், ஆசிரியர் கலாசாலை,தொழில்நுட்பக்கல்லூரி என்பனவும் இயங்கவில்லை.

புகையிரதசேவை வெலிக்கந்த வரையுமே இடம்பெற்றது. பேருந்து சேவைகளும் இடம்பெறவில்லை.

## சாவு அறிவித்தல்

### திரு.கந்தையா-பொன்னம்பலம்

சரசாலை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் உயிலங்குளம் துணுக்காயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னம்பலம் அவர்கள் 20 – 07 – 2003 (ஞாயிற்றுக்கிழமை) அகால மரணமானார். அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், அரியமலரின் அன்புக் கணவரும், அருட்குமரன்(கனடா), உஷாகரன் (லண்டன்), சிவாகரன், சிறிகரன், காயத்திரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கனகரத்தினம், மார்க்கண்டு, கந்தசாமி, கனகம்மா,பரமேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயலட்சுமி, சிவராசா ஆகியோரின் மைத்துனரும், சுஜாத்தா (லண்டன்), மயூரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யதுர்ஷன், சதுர்ஷன் ஆகியோரின் பேரனுமாவார். இறுதிக்கிரியை 23.07.2003 நாளை புதன்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

உயிலங்குளம்
துணுக்காய்

தகவல்:-
சிறிகரன்(மகன்)

(3567)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜுலை மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.